# களணி பல்கலைக்கழக - 2010

## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

### 1.1 அபிப்பிராயம்

-------------------------

இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள களனிப் பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் சொத்துக்களை அகற்றுதல் உரிய படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட ரூபா 332,341,396 கூட்டுத் தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகளை காண்பிக்கின்ற வரைபு அறிக்கையொன்று 2011 ஜுன் 07 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் ரூபா 62,669,081 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் திருத்தப்பட்டு திருத்திய நிதிக் கூற்றுக்கள் 2011 ஜுலை 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) ராகம மருத்துவ பீடத்தில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 26,299,657 பாடநெறி வருமானமொன்று ஈட்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் வருமானத்தினை வருமானச் செலவினக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினங்களை மேற்கொண்ட பின்னர் எஞ்சிய தொகையானது ஐந்தொகையில் செலவிடப்படாத மூலதன செலவினக் கணக்கிற்கு ரூபா 19,863,403 என செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கட்டணங்களை அறவிடும் பாடநெறிகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த மிகைகளை அந்தந்த வருடங்களில் ஈட்டியிருந்த வருமானமாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்படாது ஐந்தொகையில் பிற்போடப்பட்ட செய்யப்பட்ட பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2010 திசெம்பர் 31 இல் பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் மீதி ரூபா 197,860,761 வரை அதிகரித்திருந்தது.

(ஈ) (i) மீளாய்வாண்டில் வெளிவாரிப்பட்டப் பரீட்சை பாடநெறிகளிற்காக பதிவு செய்துகொண்டிருந்த மாணவர்களிடமிருந்து 03 வருட விரிவுரைக் கட்டணங்களாக ரூபா 46,792,250 அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 15% ஆன ரூபா 7,018,838 இனை பகுதிநேரச் சேவைகளிற்காக வருமான செலவினக் கணக்கிற்கு செலவு வைத்த பின்னர் எஞ்சியிருந்த ரூபா 39,773,412 விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்த காலப்பகுதிக்கேற்ப வருமானச் செலவுக் கணக்கிற்கு சீராக்கப்படாது ஐந்தொகையில் பிற்போடப்பட்ட பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டுகளில் அவ்வாறு வருமானச் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது காணப்பட்ட விரிவுரைக் கட்டணங்கள் வைப்புக் கணக்கின் மீதி ஆகிய ரூபா 80,909,035 ஆனது வெளிவாரிப் பரீட்சைகள் ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) பாடநெறி வருமானங்கள் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்கையில் பல வருடங்களிற்காக கிடைக்கப் பெறுகின்றமையால் அந்தந்த வருடங்களிற்குரித்தான வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 61 பாடநெறிகளிற்கான வருமானங்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் செலவினங்களை கணக்கீடு செய்கையில் நிர்மாணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 25,276,156 ஆன மூலதனச் செலவினமும் வருமானச் செலவுக் கணக்கிற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ராகம மருத்துவ பீடத்தின் ரூபா 127,205,387 கட்டிடங்கள் மற்றும் பெறுமதியினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்த ஏனைய நிலையான சொத்துக்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று இல்லாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பந்தி | 2001 – 2008 காலப்பகுதியில் உடன்படிக்கைகளை மீறிய 10 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 11,517,448 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் மூலப் பிரதி காணாமல் போனமையால் விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 1,358,945 தொகையினை அறவீடு செய்வதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. |
| (ஆ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய 08/2006 ஆம் இலக்க கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 4.2.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் 03 வருடங்களிற்குத் தேவையான முக்கிய கொள்வனவுகளிற்காக வருடாந்த விபரமான கொள்வனவுகள் திட்டமொன்றைத் தயாரித்திருக்காத நிலையிலும் மீளாய்வாண்டில் ரூபா 208,211,381 பெறுமதியான வழங்கல் மற்றும் மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக நிறுவனத்தின் பதவியணிக்காக மொழித் தேர்ச்சிப் படியாக மீளாய்வாண்டில் ரூபா 948,725 செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவன செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 1,098,772,333 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா. 909,549,432 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 984,910,348 மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 113,861,985 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 880,040,566 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 29,508,866 ஆக குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 84,353,119 வீழ்ச்சிக்கு ரூபா 171,350,117 செலவின அதிகரிப்பு தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.2.1 கற்கைச் செயலாற்றுகை

---

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் பல்கலைக்கழக கல்விப் பணிகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பீடம்** | **சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | | **பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2009 | 2010 |
| விஞ்ஞானம் | 492 | 491 | 378 | 420 |
| சமூக விஞ்ஞானம் | 599 | 1058 | 560 | 566 |
| மனிதவளக் கலை | 449 | 418 | 284 | 310 |
| மருத்துவம் | 224 | 225 | 167 | 169 |
| வணிக முகாமைத்துவம் | 507 | 525 | 768 | 481 |
| பட்டப்பின் படிப்பு | 1673 | 1203 | 1042 | 1176 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 39% ஆனோர் சமூக விஞ்ஞான பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அப் பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 76% ஆல் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டில் வணிக முகாமைத்துவம், விஞ்ஞானம், மனிதவளக் கலை மற்றும் மருத்துவ பீடங்களிற்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளல் விகிதாசாரம் முறையே 3.0%, 3.6%, 4.4% மற்றும் 1.6% இனால் குறைவடைந்திருந்தமையைக் காண முடிந்தது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வணிக முகாமைத்துவ பீடத்தில் பட்டங்களைப் பெற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 37% குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகத்தில் பட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 9.7% பொதுவான குறைவொன்றைக் காணக் கூடியதாக இருந்தது.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பட்டப்பின் படிப்பிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 28% குறைவொன்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்களைப் பெற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 12.8% அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த ஆய்வு கலந்துரையாடல் (Symposium)**

---

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(i) பல்கலைக்கழகத்தின் நோக்குக் கூற்றின் படி ஆய்வுகளின் ஊடாக புதிய அறிவினைத் தேடல் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் பொதுவாக 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்த வருடாந்த ஆய்வுக் கலந்துரையாடல்களிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆய்வுகளின் எண்ணிக்கை முறையே 170, 140 மற்றும் 134 என்ற ரீதியில் தொடர்ச்சியாக குறைவடைந்து செல்லும் போக்கொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த வருடாந்த ஆய்வுச் செயற்பாடுகளின் படி ஒட்டு மொத்த விரிவுரையாளர்களில் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 28% ஆன குறைந்த விகிதாசாரமொன்றில் காணப்பட்டது.

(ii) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,155,288 , ரூபா 2,403,601 மற்றும் ரூபா 2,021,202 தொகையொன்று உள்வாரி ஆய்வுகளிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் பணம் செலவிடப்பட்டிருந்த ஆய்வுகளிற்குரிய ஆய்வறிக்கைகள் கலந்துரையாடலிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பல்கலைக்கழகத்தின் திருத்தப்பட்ட தவணைகளின் பிரகாரம் விஞ்ஞான பீடத்தின் நான்காம் ஆண்டிற்கான முதலாம் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிட வேண்டிய இறுதித் திகதிகள் முறையே 2010 மே 18 மற்றும் 2010 நொவம்பர் 29 ஆக காணப்பட்ட போதிலும் 06 மாணவர்கள் கல்வி பயின்று வந்த பிறப்புயிரியல் விஞ்ஞான கற்கைகள் பிரிவின் முதல் அரையாண்டு பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 09 மாதங்களும் இரண்டாவது அரையாண்டு பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 03 மாதங்களும் தாமதம் ஏற்பட்டிருந்தன.

(ii) விஞ்ஞான பீடத்தின் 2008/2009 ஆம் கல்வி ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட கல்வித் தவணைகளின் படி முதல் அரையாண்டு பெறுபேறுகளை வெளியிடுவதில் விஞ்ஞான கற்கைகள் பிரிவில் 239 நாட்களாலும் இராசயண விஞ்ஞான கற்கைகள் பிரிவில் 237 நாட்களாலும் கணிதப் பிரிவில் 79 நாட்களாலும் தாமதங்கள் செய்யப்பட்டிருந்தன. கைத்தொழில் நிர்வாகம், புள்ளிவிபர கணனி விஞ்ஞானம் மற்றும் உயிரின விஞ்ஞான கற்கைப் பிரிவுகளில் 33 தொடக்கம் 54 தினங்கள் வரை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

இரண்டாம் அரையாண்டில் விஞ்ஞான பீடத்தின் 07 கற்கைப் பிரிவுகளில் பெறுபேறுகளை வெளியிடுதல் 16 தொடக்கம் 64 நாட்கள் வரை தாமதம் ஏற்பட்டிருந்தது.

**(ஈ) மாணவர் ஒருவரிற்கான கிரயம்**

-------------------------------------------------------

மீளாய்வாண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,324,267,220 ஆனதுடன் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 8547 ஆகும். அதன் படி ஆண்டுக்கான மாணவர் ஒருவரிற்குரிய சராசரிக் கிரயம் ரூபா 154,939 ஆனதுடன் முன்னைய ஆண்டின் மாணவர் ஒருவரிற்கான கிரயமாகிய ரூபா 140,774 உடன் ஒப்பிடுகையில் ரூபா 14,169 ஆகிய 10% அதிகரிப்பொன்று வெளிப்பட்டது.

### 2.2.2 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிறப்புயிரியல் விஞ்ஞான பிரிவின் கட்டுப்பாட்டின் கீழுள்ள A/12/102 மற்றும் A/12/105 ஆம் இலக்க இரண்டு விஞ்ஞான ஆய்வுகூடங்களும் 2011 ஜூன் 30 ஆந் திகதி வரை 09 மாதங்களிற்கும் மேற்பட்ட காலமாக குறைப்பயன்பாட்டில் இருந்ததாக மாணவர்கள் கையொப்பமிட்டிருந்த பதிவேட்டினூடாக அவதானிக்கப்பட்டதுடன் பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையிலும் அவ் ஆய்வுகூடங்கள் பயன்படுத்தப்படாது மூடி விடப்பட்டிருந்தமை உறுதியாகியது.

(ஆ) களனிப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் பிரிவிலிருந்து பல்வேறு பிரதேசங்களிலும் அமைந்துள்ள மத்திய நிலையங்களிற்கு விரிவுரைகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்வதனையும் மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுவதனையும் நோக்காகக் கொண்டு செவி விழிப்புல வலைப்பின்னல் முறைமையொன்றை வாங்கிப் பொருத்துவதற்காக 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 23,383,000 கிரயமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மருத்துவ பீடத்தின் ஆய்வுப் பணிகளிற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 694,387 தொகை ஆய்வுகளை மேற்கொள்ளாது ஒரு வருடத்திற்கும் மேலாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. ஆய்வுகளின் எஞ்சிய பணிகளை மேற்கொள்வதற்கு நிதி பற்றாக்குறையாக உள்ளமையால் உடன்படிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உப வேந்தர் குறிப்பிட்டிருந்தார்.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரித்துக் கொள்வதற்காக 2008 ஆம் ஆண்டில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் தேவைக்கமைய பொருத்தமான மதிப்பீடொன்றிற்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட மென்பாகமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரரினால் சொத்துக்களை பதிவேட்டிற்கு உள்வாங்குகையில் அவை காணப்படும் இடங்கள்/அலுவலகங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக சொத்துக்களின் வகைக்கமைய தேவையான தகவல்களை அப் பொதியிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அச் சொத்துக்கள் பதிவேடு 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவுமில்லை.

### 2.2.3 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------------

முதலாவது ஒப்பந்தக்காரரினால் கைவிடப்பட்டிருந்த வணிக முகாமைத்துவ கல்விப் பீடத்திற்கான கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் ஒப்பந்தந்தின் எஞ்சிய வேலைகளை பூரணப்படுத்துவதற்காக இரண்டாவது ஒப்பந்தகாரரிற்கு 2008 ஜனவரி 28 ஆந் திகதி ரூபா 142,672,942 இற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2010 ஜனவரி 26 ஆந் திகதியன்று 02 வருடங்களில் வேலைகளை முடிவுறுத்துவதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்ந்தத்தின் செயன்முன்னேற்றம் 75% ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 2.2.4 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

------------------------------------------------

ராகம மருத்துவ பீடத்தின் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவதில் தாமதம் செய்யப்பட்டமை காரணமாக தண்டக் கட்டணமாக ரூபா 94,216 முன்னைய ஆண்டிற்காகவும் ரூபா 47,657 மீளாய்வாண்டிற்காகவும் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களை உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களுக்கிடையில் 10% தொடக்கம் 100% வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சில்லறை முற்பணங்கள்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) கணக்கீடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) விடுதி நிர்வாகம்

(ஊ) உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள்

(ஊ) வாகனப் பாவனை

(எ) பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

(ஏ) ஊழியர் நிர்வாகம்